தஞ்சாவூர் அரண்மனை

*** 210. வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை அரண்மனையில் உள்ள கூடகோபுரம் பழுதடைந்து தற்போது இடியும் நிலையில் உள்ளது என்பது உண்மையா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம். பழுது பார்க்கும் பணி விரைவில் மேற்கொள்ளப்படும்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்தக் கூடகோபுரத்தை பழுது பார்க்கும் பணியை மத்திய சர்க்கார் மேற்கொள்ள வேண்டியிருக்கிறதா? அல்லது மாநில அரசாங்கத்திற்கு பணியை மேற்கொள்ள உரிமை வழங்கப் பட்டிருக்கிறதா? மாநில அரசாங்கத்திற்கு உரிமை வழங்கப்பட்டிருந்தால் மத்திய அரசாங்கம் அதற்குச் செலவிடும் தொகை எவ்வளவு? அந்த வேலை எப்போது செய்து முடிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தஞ்சை அரண்மனையைப் பொறுத்தவரையில், அது தமிழக அரசின் மேற்பார்வையில் தான் இருக்கிறது. இப்போது பொதுப்பணித் துறை அதை மேற்பார்வை செய்து வருகிறது. சில பகுதிகள் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன. மேலும் சில பகுதிகள் பழுதுபட்டிருக்கின்றன. எல்லாவற்றையும் பழுதுபார்க்க அதிக மாகச் செலவு ஆகும். ஆகவே, அரண்மனையின் அந்தப் பகுதியை தொல் பொருள் ஆராய்ச்சித் துறைக்கு மாற்றிட பொதுப்பணித் துறை விருப்பம் தெரிவித்திருக்கிறது. தொல்பொருள் ஆராய்ச்சித் துறை பழுதுபார்க்கும் பணியை மேற்கொள்ள இருக்கிறது.

Wages for labourers

* 211 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state whether there is any proposal to amend the Minimum Wages Rules to enable the plantation workers to get double the normal wages for overtime work?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : ஆம்.

திரு. என். கே. பழனிசாமி : சார், இப்போது 'ஓவர் டைம் வேஜஸ' ஒரு கிலோவுக்கு 4½ அணா விதம் கொடுக்கிறார்கள். ஆனால் அண்டையில் இருக்கிற கேரளத்தில் ஒரு கிலோவுக்கு 9 அணா விதம் கொடுக்கிறார்கள். அதைப்போல் இங்கும் கொடுக்க, தக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?